# போதைப்பொருள் விநியோகிக்கும் கும்பல்

# கூண்டோடு முறியடிப்பு

**ஜோகூர்பாரு, பிப். 10-**


சிங்கப்பூர் மற்றும் மலேசியர்களை உள்ளடக்கிய அனைத்துலக போதைப்பொருள் விநியோகம் செய்யும் கும்பல் ஒன்றினை நடவடிக்கை மூலம் ஜோகூர் போலீஸ் முறியடித்துள்ளது.

அக்கும்பலின் தலைவன் என சந்தேகிக்கப்படும் 46 வயதான சிங்கப்பூரியர் ஒருவர் மலேசியாவிலிருந்து சிங்கப்பூருக்கு போதைப்பொருள்களை கொண்டு செல்வதில் துடிப்பாக செயல்பட்டு வருபவன் என தெரிய வந்துள்ளது.

கடந்த பிப்ரவரி 4ஆம் தேதி நடத்தப்பட்ட அதிரடி சோதனை ஒன்றில் அக்கும்பலைச் சேர்ந்த இரு சிங்கப்பூரியர்கள் உட்பட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர். அதுமட்டுமல்லாது, ஹெரோயின், ஷாபு, கெதமின் எரிமின், மற்றும் எக்ஸ்டசி வகையிலான வெ.310,000 மதிப்பிலான போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், ரொக்கப்பணம் மற்றும் வெ.750,000 மதிப்பிலான பல்வகை வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு சீல் வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பிப்ரவரி 10ஆம் தேதி வரையில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்படுவர் என ஜோகூர் மாநில போலீஸ் தலைவர் டத்தோ முகமது மொக்தார் முகமது ஷாரிப் தெரிவித்தார்.

செக்ஷன் 39(பி) குற்றவியல் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட இவ்வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் மரணதண்டனை விதிக்கப்படலாம். இவ்விவகாரத்தை எளிதில் முடிக்க மற்றும் போதைப்பொருள் குற்றச்செயல்களை முறியடிக்க உதவிய



சிங்கப்பூர் போதைப்பொருள் தடுப்பு பிரிவிற்கு தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

இதனை தவிர்த்து மற்றொரு விவகாரத்தில், பல்வகை போதைப்பொருள் குற்றங்களுக்காக ஜோகூர் போதைப்பொருள் துடைத் தொழிப்பு பிரிவு பிப்ரவரி 5ஆம் தேதி வரையில் 1,872 பேரை கைது செய்துள்ளது. அதே சமயத்தில் பல்வகை மதிப்பிலான 10.12 கிலோ எடை கொண்ட பல்வகை போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டு சுமார் வெ.380,000 மற்றும் வெ.15 லட்சம் மதிப்பிலான பொருள்கள் சீல் வைக்கப்பட்டது. அதோடு சுமார் 23 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பதனையும் அவர் தெரிவித்தார்.